DEPOSITION OF WITNESS
(In the Court of the Principal District Munsif, Sankarankovil
O.S. No. 221/2016

| | |
|---|---|
| Deposition of Witness for | : Dw1 |
| Name | : முருகேஷ்வரி |
| Father`s Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 16.09.2022 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 16th September 2022.

முதல் விசாரணை

நான் வழக்கின் 2ம் பிரதிவாதி. நான் இன்று இவ்வழக்கில் சத்தியபிரமாணம் நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். மேற்படி வாக்குமூலத்தை படித்து பார்த்து அதில் நான் கையொப்பம் செய்திருக்கிறேன். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தை எனது தரப்பு முதல் விசாரணையாக ஏற்றுக்கொள்ள பிரார்த்திக்கிறேன்.

18.08.1995 தேதியில் குருசாமி கோனார் மற்றும் ராமாத்தாள் ஆகியோர் 1ம் பிரதிவாதியின் மனைவி பேச்சியம்மாளுக்கு எழுதிக்கொடுத்த உயில் ஆவணம் அசல் தாக்கல் செய்கிறேன். அது (**பி.வா.சா.ஆ. 2**). ஆக குறியீடு செய்யப்படுகிறது.

18.11.2010 தேதியில் பேச்சியம்மாள் 2ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த செட்டில் மெண்ட் ஆவணம் அசல் தாக்கல் செய்கிறேன். அது (**பி.வா.சா.ஆ. 3**). ஆக குறியீடு செய்யப்படுகிறது.

16.11.2010 தேதியில் 1ம் பிரதிவாதியும் அவரது மக்களும் 2ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த பாகபாக்கிய விடுதலை ஆவணம் அசல் தாக்கல் செய்கிறேன். அது (**பி.வா.சா.ஆ. 4**). ஆக குறியீடு செய்யப்படுகிறது.

1ம் பிரதிவாதி மற்றும் 2ம் பிரதிவாதி பெயரிலுள்ள தபசில் சொத்திற்குரிய பட்டா எண். 715, 4642 கணிணி நகல் தாக்கல் செய்கிறேன். அது (**பி.வா.சா.ஆ. 5**). ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**பி.வா.சா.ஆ 2 முதல் 5 வரை ஆவணங்கள் வாதி தரப்பு ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது.**

நான் தாக்கல் செய்துள்ள மேற்படி ஆவணங்களை ஏற்றுக்கொண்டு வழக்கை தள்ளுபடி செய்யவேண்டுமென பிரார்த்திக்கிறேன்.